www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com

**12**ஆம் வகுப்பு.

# காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2019

## பொருளியல் (விடைகளுடன்)

நேரம் : 2.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள்:**

(1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

குறிப்பு : (i) **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். [20 × 1 = 20]**

(ii) **கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**1.** "மேக்ரோ" என்ற வார்த்தையை அறிமுகப்படுத்தியவர் யார்?

அ) ஆடம் ஸ்மித் ஆ) ஜே. எம். கீன்ஸ்

இ) ராக்னர் பிரிக்ஸ் ஈ) காரல் மார்க்ஸ்

**2.** கீழ்வருவனவற்றுள் ஓட்ட மாறிலியை கண்டுபிடி.

அ) பண அளிப்பு ஆ) சொத்துகள்

இ) வருவாய்

ஈ) வெளிநாட்டுச் செலாவணி இருப்பு

**3.** எத்தனை முறைகளால் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?

அ) இரண்டு ஆ) மூன்று

இ) ஐந்து ஈ) நான்கு

**4.** தனிநபர் வருமானத்திலிருந்து நேர்முக வரிகளை கழித்தால் கிடைக்கும் வருமானம்__________ ஆகும்

அ) பெயரளவு வருமானம்

ஆ) செலவிடக்கூடிய வருமானம்

இ) உண்மை வருமானம்

ஈ) தலா வருமானம்

**5.** வருமான முறை என்பது

அ) $y = w + r + i + \pi + (R - P)$

ஆ) $y = w + i + r + \pi + R - P$

இ) $y = w + r + \pi + i + R / P$

ஈ) $y = w + r + i + \pi + R \times P$

**6.** தொகுதேவை சமம்

அ) C+I+G ஆ) C+I+G+X–M

இ) C+S+T+X–M ஈ) C+S+T+Rf

**7.** மறைமுக வேலையின்மையில், உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி

அ) பூஜ்யம் ஆ) ஒன்று

இ) இரண்டு ஈ) நேர்மறை

**8.** தொன்மைக் கோட்பாட்டின்படி, வட்டிவீதம் ________க்கான வெகுமதி.

அ) முதலீடு ஆ) தேவை

இ) மூலதனம் ஈ) சேமிப்பு

**9.** தேசிய வருவாய் உயரும் போது

அ) APC யின் மதிப்பு குறைந்து சென்று MPC யின் மதிப்பை நெருங்கிவிடும்.

ஆ) APC உயர்ந்து MPC யின் மதிப்பைவிட்டு விலகிச் செல்லும்.

இ) APC மாறாமல் இருக்கும்.

ஈ) APC முடிவிலியை நெருங்கிச் செல்லும்.

**10.** MPC ஐயும் MPS ஐயும் கூட்டினால் கிடைப்பது

அ) 1 ஆ) 2 இ) 0.1 ஈ) 1.1

**11.** **பொருத்துக:**

அ) MPS - 1. C+S

ஆ) K - 2. $\Delta I / \Delta C$

இ) Y - 3. $\Delta S / \Delta Y$

ஈ) $\beta$ - 4. $\frac{1}{1 - MPC}$

அ) 1 2 3 4 ஆ) 2 1 4 3

இ) 3 4 1 2 ஈ) 1 4 3 2

**12.** RBI – யின் தலைமையகம் அமைந்துள்ள இடம்

அ) டில்லி ஆ) சென்னை

இ) மும்பை ஈ) பெங்களூரு



orders@surabooks.com PH: 9600175757 /8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



**13.** பணவீக்கம் என்பது
அ) விலைகள் அதிகரிப்பு
ஆ) விலைகள் குறைதல்
இ) பணமதிப்பு அதிகரிப்பு
ஈ) விலைகள் மாறாதிருத்தல்

**14.** வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுவது.
அ) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா
ஆ) நபார்டு
இ) ஐசிஐசிஐ ஈ) இந்திய ரிசர்வ் வங்கி

**15.** நபார்டு வங்கி எப்பொழுது தொடங்கப்பட்டது?
அ) ஜுலை 1962 ஆ) ஜுலை 1972
இ) ஜுலை 1982 ஈ) ஜுலை 1992

**16.** 2016ல் பணமதிப்பு நீக்கம் எந்தெந்த மதிப்பு பணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது?
அ) ₹500 மற்றும் ₹1000
ஆ) ₹1000 மற்றும் ₹2000
இ) ₹200 மற்றும் ₹500
ஈ) மேற்சொன்னவை அனைத்தும்

**17.** பணமாற்று வீதம் நிர்ணயமாகும் சந்தை
அ) பண சந்தை
ஆ) அந்நிய செலாவணி
இ) பங்கு சந்தை ஈ) மூலதன சந்தை

**18.** ஏற்றுமதி நிகரம் என்பது
அ) ஏற்றுமதி × இறக்குமதி
ஆ) ஏற்றுமதி + இறக்குமதி
இ) ஏற்றுமதி – இறக்குமதி
ஈ) பணிகள் ஏற்றுமதி

**19.** பன்னாட்டு பண நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்
அ) வாஷிங்டன் டி.சி ஆ) நியூ யார்க்
இ) வியன்னா ஈ) ஜெனிவா

**20.** கீழ்க்கண்டவற்றில் எது சார்க் (SAARC) உறுப்பினர் நாடு அல்ல?
அ) பாகிஸ்தான் ஆ) ஸ்ரீலங்கா
இ) பூடான் ஈ) சீனா

## பகுதி - II

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30–க்கு கட்டாயமாக விடையளிக்கவும் 7 × 2 = 14**

**21.** பணவீக்கம் என்பதை வரையறுக்கவும்.

**22.** GNP கணக்கிடும் சூத்திரத்தை எழுதுக.

**23.** தற்போதுள்ள சூழலில் ஆள் குறைப்பிற்கான காரணத்தை தருக.

**24.** சராசரி நுகர்வு நாட்டம் (APC) வரையறு.

**25.** பணத்தின் இலக்கணம் வரைக.

**26.** நெகிழிப் பணம் என்றால் என்ன? உதாரணம் தருக.

**27.** பணவியல் கொள்கை என்றால் என்ன?

**28.** பண மதிப்பிறக்கம் என்றால் என்ன?

**29.** பொதுச்சந்தை வரையறுக்கவும்.

**30.** பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.

## பகுதி - III

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 40–க்கு கட்டாயமாக விடையளிக்கவும் 7 × 3 = 21**

**31.** பொருளாதார அமைப்புகளின் வகைகளை குறிப்பிடுக.

**32.** தேசிய வருவாய் கணக்கிடுதலில் இருமுறை கணக்கீட்டுப் பிரச்சனைக்கு என்ன தீர்வு.

**33.** தொகுதேவை என்றால் என்ன? அதன் கூறுகளை கூறுக.

**34.** பெருக்கியின் வகைகள் யாவை?

**35.** தேவை இழுப்பு மற்றும் செலவு உந்து பணவீக்கத்தினை விளக்குக..

**36.** நபார்டின் பணிகள் யாவை?

**37.** பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கத்தை பட்டியலிடுக.

**38.** வாணிக ஒத்துழைப்புத் தொகுதிகள் என்றால் என்ன?

**39.** சேயின் விதியில் விளைவுகளைப் பற்றி குறிப்பு வரைக.

**40.** தலைவீத வருமானம் பற்றி சிறு குறிப்பு வரைக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 × 5 = 35**

**41.** (அ) பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) இர்விங் பிஷரின் பண அளவுக் கோட்பாட்டினை விளக்குக.

orders@surabooks.com PH: 9600175757 /8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**42.** (அ) நான்கு துறை பொருளாதாரத்தின் வருவாயின வட்ட ஓட்டம் விளக்குக.

(அல்லது)

(ஆ) கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.

**43.** (அ) தேசிய வருவாயின் அடிப்படை கருத்துக்களை விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) சேயின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க.

**44.** (அ) தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை? விளக்குக.

**45.** (அ) ADF மற்றும் ASFக்கு இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரிக்கவும்

(அல்லது)

(ஆ) உள்நாட்டு வாணிபத்துக்கும் பன்னாட்டு வாணிபத்துக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை விவாதிக்கவும்.

**46.** (அ) நுகர்வு சார்வின் அக மற்றும புறக்காரணிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) உலக வங்கியின் பணிகளை வெளிக்கொணர்க.

**47.** (அ) வணிகச்சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விளக்குக.

## விடைகள்

### பகுதி - I

**1.** இ) ராக்னர் பிரிக்ஸ்
**2.** இ) வருவாய்
**3.** ஆ) மூன்று
**4.** ஆ) செலவிடக்கூடிய வருமானம்
**5.** அ) $y = w + r + i + \pi + (R - P)$
**6.** ஆ) C+I+G+X–M
**7.** அ) பூஜ்யம்
**8.** ஈ) சேமிப்பு
**9.** அ) APC யின் மதிப்பு குறைந்து சென்று MPC–யின் மதிப்பை நெருங்கிவிடும்.
**10.** அ) 1
**11.** இ) 3 4 1 2
**12.** இ மும்பை
**13.** அ) விலைகள் அதிகரிப்பு
**14.** ஈ) இந்திய ரிசர்வ் வங்கி
**15.** இ ஜுலை 1982
**16.** அ) ₹500 மற்றும் ₹1000
**17.** ஆ) அந்நிய செலாவணி
**18.** இ ஏற்றுமதி – இறக்குமதி
**19.** அ) வாஷிங்டன் டி.சி
**20.** ஈ) சீனா

### பகுதி - II

**21.** பணவீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும்.

**22.** மொத்த நாட்டு உற்பத்தி (GNP) சந்தை விலையில் = சந்தை விலையில் GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம்

**23.** (i) ஒரு பொருளுக்கான தேவை குறைதல் அல்லது பிற பொருள்களின் தேவை அதிகரித்தல் இரு பொருட்கள் இன்மை, முதலீடு பற்றாக்குறை ஆகியவையும் இவ்வகை வேலையின்மைக்கு காரணமாகிறது.

(ii) உதாரணமாக, கைபேசியின் தேவை அதிகரித்ததால், கேமராவின் தேவை மற்றும் டேப் ரெக்கார்டர்களின் தேவை குறைந்துள்ளது.

(iii) இந்தியாவில் மூலதன பற்றாக்குறையால் மக்கள் வேலையின்றி இருக்கின்றனர்.

**24.** வருமானத்திற்கும் நுகர்வுக்குமான வீதமே சராசரி நுகர்வு நாட்டமாகும்.

கணித ரீதியாக

$$APC = \frac{C}{Y}$$

இங்கு
C - நுகர்வு
Y - வருமானம்.

**25.** "பணம் எதைச் செய்கிறதோ, அதுதான் பணம்" என்று வாக்கர் கூறுகிறார்.

(அல்லது)

"பரிவர்த்தனைகளில் பொது ஏற்புத்தன்மை கொண்ட ஒரு இடையீட்டுக் கருவியாகவும், மதிப்பளவை மற்றும் மதிப்பினை இருப்பு வைத்தல் ஆகியவற்றினைச் செய்யும் ஒன்றாகவும் இருப்பது பணம் ஆகும்" என்று கிரௌதர் கூறுகிறார்.

orders@surabooks.com PH: 9600175757 /8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



**26.** (i) அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட பணம் நெகிழிப் பணமாகும்.

(ii) நிதிப் பொருட்களின் வரிசையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தோற்றமாகும்.

(iii) நெகிழிப் பணம் நடைமுறையிலுள்ள காகிதப் பணத்திற்கு ஒரு மாற்றமாகும்.

(iv) தினந்தோறும் பயன்படுத்தும் வகையில் நெகிழி அட்டையால் உருவாக்கப்பட்டவையே நெகிழி பணம் எனப்படும்.

(v) எ.கா : ரொக்க அட்டை, கடன் அட்டை, பற்று அட்டை போன்றவை ஆகும்.

**27.** பண அளிப்பு மற்றும் வட்டி விகிதத்தை மேலாண்மை செய்யும் நோக்கோடு உருவாக்கப்படும் பேரினப் பொருளியல் கொள்கையே பணவியல் கொள்கை எனப்படுகின்றது.

**28.** ஒரு நாட்டின் மைய வங்கி அந்நாட்டின் பணத்தை மற்ற நாடுகளின் பண மதிப்பில் தானாக முன்வந்து குறைத்து நிர்ணயிப்பதே செலாவணி மதிப்பு குறைப்பு ஆகும்.

**29.** புவியின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் அமைந்துள்ள நாடுகள் தடையற்ற வாணிகம் மற்றும் உற்பத்திக் காரணிகள் இடப்பெயர்ச்சிக்காக அமைக்கும் அமைப்பே பொது சந்தை. உதாரணம்.: ஐரோப்பிய பொது அங்காடி

**30.** டான் புண், பிஸ்சார், ஸ்டார்டிஸ், கூற்றுப்படி "பேரியல் என்பது உண்மைகள் மற்றும் கோட்பாடுகளை ஒருங்கிணைப்பது பற்றியதே" ஆகும்.

## பகுதி - III

**31.** பொருளாதார அமைப்புகளின் பல்வேறு அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

**(i)** **வளர்ச்சி நிலை** : வளர்ந்த, வளராத, முன்னேறாத மற்றும் வளரும் பொருளாதார அமைப்புகள்.

**(ii)** **நடவடிக்கைகளின் முறை** : முதலாளித்துவ, சமத்துவ மற்றும் கலப்பு பொருளாதார அமைப்புகள்.

**(iii)** **நடவடிக்கைகள் அளவு** : சிறிய மற்றும் பெரிய பொருளாதார அமைப்புகள்.

**(iv)** **செயல்படும் தன்மை** : நிலையான மற்றும் இயங்கும் பொருளாதார அமைப்புகள்.

**(v)** **செயல் பரப்பு தன்மை** : மூடிய மற்றும் திறந்த வெளி பொருளாதார அமைப்புகள்.

**32.** **இருமுறை கணக்கெடுப்பு :**

**(i)** ஒரே பொருள் பல இடங்களில் மதிப்பிடப்படும் வாய்ப்பு இம்முறையில் இருக்கிறது.

(ii) இறுதி உற்பத்திக்கு எந்த ஒரு பொருள் மூலப் பொருளாகவோ அல்லது இடைநிலைப் பொருளாகவோ இருந்தால் அப்பொருளின் உற்பத்தியை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது.

(iii) உதாரணத்திற்கு, ஜவுளியின் விலைக்குள் துணியின் விலையும், துணியின் விலைக்குள் நூலின் விலையும், நூலின் விலைக்குள் பஞ்சின் விலையும் உள்ளது. எனவே பஞ்சு, நூல், துணி மற்றும் ஆடைகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பினைக் கூட்டுவது "பல முறை கணக்கில் சேர்த்தல்" என பிழைக்கு வழிவகுக்கும்.

**33.** (i) உழைப்பாளர்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கிறார்களோ அதுவே மொத்த தேவை.

(ii) பொருளாதாரத்தின் தொகு தேவைதான் உற்பத்தியை நிர்ணயிக்கிறது.

(iii) வேறுபட்ட வேலை நிலையில் உற்பத்தி செய்ததை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாய் அல்லது எதிர்பார்க்கும் வருவாயை தொகு தேவை என்கிறோம்.

**தொகு தேவையின் நான்கு கூறுகளாவன :**

1. நுகர்வுத் தேவை
2. முதலீட்டுத் தேவை
3. அரசுச் செலவு
4. நிகர ஏற்றுமதி (Export of Import)

**தொகு தேவையின் சூத்திரம்**

$$AD = C + I + G + (X - M)$$

**34.** **(i)** வரி பெருக்கி

**(ii)** வேலைவாய்ப்பு பெருக்கி

**(iii)** வெளிநாட்டு வர்த்தக பெருக்கி

**(iv)** முதலீடு பெருக்கி

**35.** ***(i)*****தேவை – இழுப்பு பணவீக்கம் :**

1. எப்பொழுதுமே தேவை மற்றும் அளிப்பு ஆகியன பணவீக்கத்தை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.
2. அளிப்பு நிலையாக உள்ள நிலையில், பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும் பொழுது விலைவாசி உயருகின்றன.
3. இதுவே தேவை - இழுப்பு பணவீக்கம் என்றழைக்கப்படுகிறது.

orders@surabooks.com PH: 9600175757 /8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



***(ii)*** **செலவு – உந்து பணவீக்கம் :**

1. உற்பத்தியில் மூலப்பொருட்கள் மற்றும் இதர இடுபொருட்களுக்கான செலவு உயருகின்றபொழுது உற்பத்தி செலவு கூடி பொருட்களுக்கான விலை அதிகரிக்கின்றது.
2. ஆகையால் இவ்வகை பணவீக்கம் செலவு – உந்து பணவீக்கம் எனப்படுகிறது.

**36.** (i) நபார்டு வங்கி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் அனைத்து வகையான உற்பத்தி மற்றும் முதலீட்டுக்காக விவசாயம், சிறுதொழில்கள், குடிசை மற்றும் கிராமத் தொழில்கள், கைவினைத் தொழில்கள் மற்றும் இதர ஊரக தொழில்நடவடிக்கைகளுக்கான மறுகடனை வழங்குகிறது.

(ii) இது மாநில கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள், நிலவள வங்கிகள் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இதர நிதிநிறுவனங்கள் ஆகியவற்றிற்கு குறுகிய கால, மத்தியகால மற்றும் நீண்டகால கடன்களை வழங்குகிறது.

(iii) கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்களின் பங்கு முதலீட்டை வழங்கும் பொருட்டு மாநில அரசுகளுக்கு 20 ஆண்டுகள் நீண்டகால கடன்களை நபார்டு வங்கி வழங்குகிறது.

(iv) மைய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சிக்கான பங்கு மூலதனம் அல்லது கடன் பத்திரங்களை பெற்றிருக்கும் நிறுவனங்களுக்கும் நீண்ட கால கடனை அளிக்கிறது.

(v) மைய அரசு, மாநில அரசுகள், திட்டக்குழு தற்பொழுது நிதி ஆயோக் மற்றும் மைய, மாநில அரசுகளின் – சிறுதொழில்கள், குடிசை மற்றும் கிராமத் தொழில்கள், கைவினைத் தொழில்கள் இதர மிகச்சிறு தொழில்களுக்கு உதவும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து வருகிறது.

(vi) நபார்டு வங்கி, வட்டார ஊரக வங்கிகள் மற்றும் துவக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை தவிர்த்த அனைத்து கூட்டுறவு வங்கிகளையும் ஆய்வு செய்யும் பணியினை செய்கிறது.

(vii) வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான ஆய்வுகளை மேம்படுத்தும் ஆய்வு மற்றும் வளர்ச்சி நிதியினை பராமரிக்கிறது.

**37.** **பன்னாட்டுப் பொருளியலின் பொருளடக்கம்:** பன்னாட்டு பொருளியலின் பொருளடக்கம் பல பாகங்களை உள்ளடக்கியது. அவை கீழ்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(i) **தூய வாணிபக் கோட்பாடு :** நாடுகள் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான காரணங்கள், எந்த வகையான பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகின்றன என்பதை விவரிக்கும் பிரிவை தூய வாணிப கோட்பாடாகும்.

(ii) **கொள்கைச் சச்சரவுகள் :** நாடுகளுக்கிடையேயான வாணிக உறவுகளை கட்டுப்படுத்துவதா, தடைகளற்ற வாணிகத்தை அனுமதிப்பதா போன்றவற்றை இப்பிரிவு விவாதிக்கிறது.

(iii) **பன்னாட்டு வாணிகக் கூட்டமைப்பு ஒன்றியங்கள் :** இந்த பிரிவு பன்னாட்டு கூட்டமைப்பு சுங்கவரி ஒன்றியங்கள் பணவியல் ஒன்றியங்கள் மற்றும் நாடுகளுக்கிடையிலான பொருளாதார ஒத்துழைப்பு, அமைப்புகளின் மூலமாக நாடுகளின் பொருளாதாரம் இணைக்கப்பட்டுள்ளதை விவாதிக்கிறது.

(iv) **பன்னாட்டு நிதி மற்றும் வாணிப ஒழுங்குபடுத்தும் நிறுவனங்கள் :** பன்னாட்டுப் பண நிதியம் மறு கட்டமைப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான பன்னாட்டு வங்கி (உலக வங்கி) உலக வர்த்தக நிறுவனம் மற்றும் வாணிகம் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டு அமைப்பு போன்ற பன்னாட்டு அமைப்புகள் நாடுகளுக்கிடையிலான பொருளாதார உறவுகளை மாற்றியமைக்கும் விதம் பற்றி இப்பிரிவில் புரிந்து கொள்ளலாம்.

**38.** (i) சில நாடுகள் வாணிகத்தில் போட்டியைத் தவிர்க்க பிற நாட்டு பொருளாதாரத்துடன் தங்களுடைய பொருளாதாரத்தை இணைத்து புதிய வாணிக வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்கின்றன.

(ii) நாடுகளுக்கிடையே சமூக நன்மை தரும் வாணிகத் தொகுதிகள் பல விதங்களில் அமைகின்றன. சமூக நன்மைக்காக நாடுகள் அமைக்கும் வாணிகத் தொகுதிகள் பரஸ்பர நல்லிணக்கத்திற்கு உதவுகிறது.

**39.** **சே விதியின் விளைவுகள் :**

(i) அதிக உற்பத்திக்கோ, வேலையின்மைக்கோ வேலையில்லை.

(ii) பயன்படுத்தாத வளங்கள் நாட்டில் இருந்தால் முழு வேலை வாய்ப்பு வரை அவற்றை பயன்படுத்துவது இலாபகரமாக இருக்கும். உற்பத்தி காரணிகள் அதன் உற்பத்தி திறனுக்கு இணையாகும் வரை ஏற்றுக் கொள்ளும்.

orders@surabooks.com PH: 9600175757 /8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



(iii) விலைக் கருவி தானாக இயங்குவதால் அங்கு அரசின் தலையீடு தேவையிருக்காது.

(iv) வட்டி வீத நெகிழ்வுத்தன்மை, சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் சமநிலையை உருவாக்கும்.

(v) பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் செயல்படும். பணத்தை மக்கள் கையிருப்பாக வைத்திருக்கமாட்டார்கள்.

**40.** (i) தலா வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும்.

(ii) தேசிய வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்கக் கிடைப்பது தலா வருமானம் ஆகும்.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{தேசிய வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

## பகுதி - IV

**41.** (அ) **(i) தேசிய வருவாய் :**

தேசிய வருவாயை கணக்கிடுதல் மற்றும் தேசிய வருவாயில் துறைகளின் பங்கு போன்றவை பேரியல் பொருளாதார பகுத்தாய்வின் அடிப்படை அம்சங்களாகும்.

**(ii) பண வீக்கம் :**

பண வீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும்.

**(iii) வாணிப சுழற்சி :**

- ✦ பொதுவாக எல்லா நாடுகளும் வாணிப ஏற்றத்தாழ்வு மற்றும் வாணிப சுழற்சியால் ஏற்படும் பிரச்சனைகளை சந்திக்கின்றன.
- ✦ மொத்த பொருளாதார காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டின் வாணிபச் சுழற்சி மாற்றங்களை தெரிந்து கொள்ள முடிகிறது.

**(iv) வறுமை மற்றும் வேலையின்மை :**

- ✦ வளங்கள் நிறைந்த நாடுகளிலும் வறுமை மற்றும் வேலையின்மை மிகப் பெரிய பிரச்சனையாக உள்ளது.
- ✦ இது ஒரு பொருளாதார முரண்பாடுகளில் ஒன்றாகும். இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காண, வளங்களை ஒதுக்கீடு செய்யவும், சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

**(v) பொருளாதார வளர்ச்சி :**

பேரியல் பகுத்தாய்வின் மூலம்தான் ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம், அதை தீர்மானிக்கும் காரணிகள் போன்றவற்றை புரிந்துகொள்ளமுடியும்.

**(vi) பொருளாதார கொள்கைகள் :**

பொருளாதார கொள்கைகளை உருவாக்குவதற்கு பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

**(அல்லது)**

(ஆ) பண அளவுக் கோட்பாடுகள் பணத்தின் அளவிற்கும், பணத்தின் மதிப்பிற்கும் இடையேயான தொடர்பினை எடுத்துரைப்பதாகும்.

**(அ) ஃபிஷரின் பண அளவு கோட்பாடு :**

**(i)** பண அளவுக் கோட்பாடு என்பது மிக பழமையான கோட்பாடு ஆகும்.

**(ii)** இது 1588 ஆம் ஆண்டு டாவன்ஷட்டி என்ற இத்தாலிய பொருளியல் அறிஞரால் முன்மொழியப்பட்டது.

**(iii)** ஆனால், நவீன வடிவிலான இக்கோட்பாட்டினை உருவாக்கிய புகழ் முழுவதும் "பணத்தின் வாங்கும் சக்தி (1911) என்ற நூலை எழுதிய அமெரிக்க பொருளியலறிஞரான இர்விங் பிஷரைச் சாரும்.

**(iv)** இச்சமன்பாட்டின் பொது வடிவம் ஆகும். இங்கு,

$$MV = PT$$

M = மொத்த (காகித) பண அளவு

V = பணத்தின் சுழற்சி வேகம்

P = பொது விலை மட்டம்

T = வாணிபத்தின் அளவு

ஃபிஷர் ஒரு நாட்டின் குறிப்பிட்ட கால அளவில் மொத்த பண அளிப்பு (MV) என்பது நாட்டில் மொத்த வாணிபத்தின் அளவு (T), (P)–பொது விலை, காகிதப் பண அளவு (M), (V) பணத்தின் சுழற்சி வேகம் ஆகிய காரணிகளால் நிர்ணயிக்கப்படுகிறது.

**வரைபட விளக்கம் :**

(i) வரைபடம் (A) மொத்த பண அளவில் ஏற்படுத்தப்படும் மாறுதல் விலை மட்டத்தில் எவ்வாறு மாற்றத்தினை ஏற்படுத்துகிறது என்பதனை உணர்த்துகிறது.

(ii) பண அளவு 0M ஆக இருக்கும்பொழுது விலைமட்டம் 0P யாக உள்ளது.

(iii) பண அளவினை $0m_2$ என இரட்டிப்பாக்கும் பொழுது விலைமட்டமும் $0P_2$ என இரட்டிப்பாகும்.

orders@surabooks.com PH: 9600175757 /8124201000 / 8124301000


Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



(iv) மேலும் பண அளவு $0M_4$ என நான்கு மடங்காக்கும் பொழுது விலைமட்டமும் $0P_4$ என நான்கு மடங்காகிறது.

(v) விலைமட்டச் சார்பு $0P = F(M)$க்கான நேர்கோடு. வரைபடத்தின் தோற்றுவாயிலிருந்து 45° அமையும்பொழுது பணத்தின் அளவிற்கும் விலைமட்டத்திற்கும் உள்ள நேரடி சமவிகித உறவு விளங்குகிறது.




வரைபடம் (B) பணத்தின் அளவிற்கும் பணத்தின் மதிப்பிற்கும் உள்ள தலைகீழ் உறவினை விளக்குகிறது. வாங்க - விற்கப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் அளவின் பண மதிப்பிற்கு (அதாவது மொத்த பண தேவைக்கு) (PT) சமமாக இருக்கும் என்று குறிப்பிடுகின்றார்.

$$MV = PT$$

பண அளிப்பு = பணத் தேவை.

**(vi)** இச்சமன்பாடு "ரொக்க பரிவர்த்தனை சமன்பாடு என்றும் அழைக்கப்படுகிறது.

**(vii)** மேற்சொன்ன சமன்பாட்டினை $P = \frac{MV}{T}$ என்று மாற்றியமைக்கும் பொழுது, பண சுழற்சி வேகமும் வாணிபத்தின் அளவும் மாறாதிருக்கும் சூழ்நிலையில் பணத்தின் அளவு எவ்வகையில் பொது விலைமட்டத்தையும், பணத்தின் மதிப்பினையும் நிர்ணயிக்கிறது.

$$PT = MV + M^1 V^1$$ அல்லது

$$P = \frac{MV + M^1 V^1}{T}$$

மேற்கண்ட விரிவாக்கப்பட்ட சமன்பாட்டில் பொது விலைமட்டமானது (P) காகிதப் பண அளவு (M) பணத்தின் சுழற்சி வேகம் (V) வங்கி கடன் பணத்தின் அளவு $(M)^1$ – வங்கிக் கடன் பணத்தின் சுழற்சி வேகம் $(V^1)$ ஆகும்.

(viii) பின்னர் பண அளவினை $0M_2$ என இரட்டிப்பாக்கும் பொழுது – பண மதிப்பு $\frac{0}{P_2}$ என பாதியாக குறைகிறது. தொடர்ந்து பண அளவினை $0M_4$ என நான்கு மடங்காக்கும் பொழுது பணமதிப்பு $\frac{0}{P}$ என நான்கில் ஒரு பகுதியாக குறைகிறது.

**42.** (அ) ✦ நிஜவாழ்க்கையில் நான்கு துறை வருவாய் வட்ட ஓட்டம் காணப்படுகிறது.

✦ நான்கு துறை பொருளாதாரத்தில், இல்லம், நிறுவனம் மற்றும் அரசு இவற்றோடு வெளியுறவுத்துறையும் இணைக்கப்படுகிறது.

✦ இந்த மாதிரியில் அமைந்துள்ள நான்கு துறைகளாவன.

(i) இல்லங்கள் (Household)

(ii) நிறுவனங்கள் (Firms)

(iii) அரசு (Government)

(iv) வெளியுறவுத் துறை (External Sector)

✦ வெளியுறவு துறையில் பொருளாதாரத்தில், ஒட்டு மொத்த செலவானது, உள்நாட்டு செலவுகள் ஆகும்.

✦ (C+I+G) மற்றும் நிகர ஏற்றுமதி (X–M) ஐ உள்ளடக்கும்.


✦ நான்கு துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்ட வரைபடம்.

orders@surabooks.com PH: 9600175757 /8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com






✦ Y = C + I + G + (X − M) நான்கு துறை பொருளாதாரத்தின் உள்ளடக்கம் ஆகும்.

**(அல்லது)**

(ஆ) (i) "உளவியல் விதியின் அடிப்படையாக மனிதர்கள் தன் முன் அறிவு அனுபவம் மற்றும் விரிவான உண்மை ஆகியவற்றின் அடிப்படையில் பெரும் நம்பிக்கையுடன் வருவாய் உயரும்போது நுகர்வை அதிகமாக்குவார்கள்.

(ii) இந்த விதி மனிதன் வருமானம் உயர்ந்த முழு அளவிற்கும் செலவு செய்யமாட்டான் என எடுத்துரைக்கிறது.

**கீன்ஸ் விதியின் அனுமானங்கள் :**

(i) மற்றவை மாறாது.

(ii) சுமூகமான சூழல் நிலவுகிறது.

(iii) முதலாளித்துவ பொருளாதாரத்தில் தலையிடாக் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது.

**விதியின் கருத்துக்கள் :**

இவ்விதி மூன்று கருத்துக்களைக் கொண்டது.

(i) வருமானம் உயரும்போது, நுகர்வு செலவும் அதிகரிக்கும்.

(ii) அதிகரித்த வருமானம் நுகர்வு செலவிற்கும், சேமிப்பிற்கும் இடையே சில விகிதத்தில் பிரிக்கப்படுகிறது.

(iii) அதிகரிக்கின்ற வருமானம் எப்பொழுதும் நுகர்வு மற்றும் சேமிப்பு இரண்டையும் அதிகரிக்கச் செய்யும். இவ்விதியின் மூன்று கருத்துக்களும் அட்டவணை உதவியுடன் விளக்கப்படுகிறது.

**அட்டவணை**

| வருமானம் Y | நுகர்வு C | சேமிப்பு S = Y – C |
|---|---|---|
| 120 | 120 | 0 |
| 180 | 170 | 10 |
| 240 | 220 | 20 |

இங்கே வருமானம் படுகிடையாகவும், நுகர்வு மற்றும் சேமிப்பு செங்குத்து அச்சிலும் அளவிடப்படுகிறது.

C – என்பது நுகர்வு சார்வு வளைகோடு 45 – டிகிரி கோடு வருமானம் மற்றும் நுகர்வின் அளவு சமமாக இருப்பதைக் காட்டுகிறது.

**43.**(அ) தேசிய வருவாயை அளவிடுவதற்கு கீழ்கண்ட கருத்துருக்கள் பயன்படுகின்றன.

**மொத்த உள்நாட்டு உற்பத்தி:** (Gross Domestic Product: GDP) : ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிநிலைப் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த சந்தை மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) ஆகும்

| |
|---|
| செலவு முறையைப் பயன்படுத்தி கணக்கிடப்படும் GDP = C + I + G + (X – M). |

**மொத்த தேசிய உற்பத்தி** (Gross National Product) (GNP): மொத்த தேசிய உற்பத்தி (GNP) என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பொருட்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பின் மொத்த கணக்கிடுதல் ஆகும்.

| |
|---|
| சந்தை விலையில் GNP = சந்தை விலையில் GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம். |

**நிகர தேசிய உற்பத்தி** (NNP at Market Prices): நிகர தேசிய உற்பத்தி என்பது ஒரு ஆண்டிடன், பொருளாதாரத்தின் நிகர உற்பத்தியின் மதிப்பு ஆகும்.

| |
|---|
| NNP = GNP – தேய்மான கழிவு |

**காரணி செலவில் நிகர தேசிய உற்பததி** (NNP at Factor Cost) : NNP என்பது உற்பத்தியின் சந்தை மதிப்பு ஆகும். காரணி செலவில் NNP என்பது உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமான செலுத்துதல் ஆகும்.

| |
|---|
| காரணி செலவில் NNP = சந்தை விலையில் NNP – மறைமுகவரி + மானியம் |

**தனிநபர் வருமானம்** (Personal Income) : தனிநபர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி நபரும் பல வழிகளில் இருந்து கிடைக்கப் பெறும் மொத்த வருமானம் ஆகும்.

| |
|---|
| தனி நபர் வருமானம் = தேசிய வருமானம் – (சமூக பாதுகாப்பு பங்களிப்பு மற்றும் பகிரப்படாத கார்பரேட் இலாபம்) + மாற்று செலுத்துதல்கள் |

orders@surabooks.com PH: 9600175757 /8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**செலவிடக்கூடிய வருமானம்** (Disposable Income): செலவிடக்கூடிய வருமானம் என்பது தனிநபர் செலவிடக்கூடிய வருமானத்தை குறிக்கிறது. தனிநபர் வருமானத்திலிருந்து நேர்முகவரிகளைக் (Eg. Income Tax) கழித்தால் கிடைப்பது செலவிடக்கூடிய வருமானம்.

| |
|---|
| செலவிடக்கூடிய வருமானம் = தனிநபர் வருமானம் – நேர்முகவரிகள் |

**தலா வருமானம்** (Per capita Income) : தலா வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும்.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{தேசிய வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

**உண்மை வருமானம்** (Real Income): பண வருவாய் என்பது தேசிய வருமானத்தை ஒரு ஆண்டில் உள்ள பொது விலை அளவுகளின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது.

| |
|---|
| நிலையான விலையில் தேசிய வருமானம் = நடப்பு விலையில் தேசிய வருவாய் ÷ $P_1/P_0$ |

**GDP குறைப்பான்** (GDP Deflator) : GDP குறைப்பான் என்பது GDPயில் குறிப்பிட்டுள்ள பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை மாற்ற குறியீட்டெண் ஆகும். இதுவும் ஒரு விலை குறியீட்டெண் ஆகும்.

$$\text{GDP குறைப்பான்} = \frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$$

**(அல்லது)**

(ஆ) **J. B. சேயின் சந்தை விதியின் திறனாய்வு–களாவன :**

(i) கீன்ஸின் கருத்துப்படி, அளிப்பு அதற்கான தேவையை உருவாக்காது.

(ii) உற்பத்தி அதிகரிக்கும் அளவுக்கு தேவை அதிகரித்தால் இந்த விதி செயல்படாது.

(iii) பொருளாதாரத்தில் தானாக சரி செய்து கொள்ளும் அமைப்பு வேலையின்மையைக் குறைக்காது.

(iv) தனிநபர் எதிர்பாராத சூழ்நிலைக்காகவும், வியாபாரி எதிர்கால நடவடிக்கைகாகவும் பணத்தை இருப்பாக வைத்திருப்பார்கள் ஆகவே பணம் நடுநிலையாக இருக்காது.

(v) அளிப்பு தன் தேவையை தானே உருவாக்கும் என்ற அடிப்படையில் செயல்படுவதால் அதிக உற்பத்திக்கு வாய்ப்பு இல்லை என்று கூறுகிறது.

(vi) முதலாளித்துவ நாடுகளில் குறைவான வேலையுள்ளதால் முழு வேலை வாய்ப்புக்கு சாத்தியமில்லை.

(vii) அளவுக்கு அதிகமான உற்பத்தி அதிக வேலையின்மையை ஏற்படுத்தும். இது பல முதலாளித்துவ நாடுகளில் காணப்படுவதால் அரசுத் தலையீடு அவசியம் என கீன்ஸ் கருதுகிறார்.

**44.** (அ) ஓர் ஆண்டில் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பை கணக்கிட்டு அதனை பணமதிப்பில் மதிப்பிட வேண்டும்.

தேசிய வருவாயை மூன்று முறைகளை பயன்படுத்தி அளவிடலாம். அவை;

(i) உற்பத்தி அல்லது மதிப்புக் கூடுதல் முறை.

(ii) வருமானம் அல்லது காரணிகளின் ஊதிய முறை மற்றும்

(iii) செலவு முறை

✦ இம்மூன்று முறைகளை சரியாக பயன்படுத்தி கணக்கிட்டால் உற்பத்தி, வருமானம், செலவு இம்மூன்றின் மதிப்பும் சமமாக இருக்கும்.

✦ | உற்பத்தி = வருமானம் = செலவு |

(i) **உற்பத்தி முறை :**

✦ உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும்.

✦ இம்முறை சரக்கு முறை என்றும் அழைக்கப்படுகிறது.

✦ ஒரு துறையின் வெளியீடு மற்றொரு துறையின் உள்ளீடாகச் செல்ல வாய்ப்பு இருப்பதால் ஒரே பொருள் இருமுறை அல்லது பல முறை கணக்கில் வர வாய்ப்பு உள்ளது.

**இந்தியாவில் பண்ணை உற்பத்தியின் மொத்த மதிப்பு கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.**

✦ 64 வகை விவசாயப் பொருள்களின் மொத்த உற்பத்தி மதிப்பிடப்படுகிறது. ஒவ்வொரு பெயரின் அதன் ஒரு ஹெக்டேருக்கான சராசரி உற்பத்தியை கணக்கிட்டு அந்தந்தப் பயிர்கள் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பால் பெருக்கி பயிரின் உற்பத்தி கணக்கிடப்படுகிறது.

✦ ஒவ்வொரு பொருளின் மொத்த உற்பத்தியும் சந்தை விலையால் மதிப்பிடப்படுகிறது.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



- **முன்னெச்சரிக்கைகள் :** ஒரே பொருள் பல இடங்களில் மதிப்பிடப்படும் வாய்ப்பு இம்முறையில் இருக்கிறது.
- **உதாரணம் :** ஜவுளியின் விலைக்குள் துணியின் விலையும், துணியின் விலைக்குள் நூலின் விலையும், நூலின் விலைக்குள் பஞ்சின் விலையும் உள்ளது. எனவே, பஞ்சு, நூல், துணி மற்றும் ஆடைகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பினைக் கூட்டுவது "பல முறை கணக்கில் சேர்த்தல்" என்ற பிழைக்கு வழிவகுக்கிறது.

(ii) **வருமான முறை :**

வருமான முறை என்பது தேசிய வருவாய் கணக்கிடல் பகிர்வு பகுதியிலிருந்து அணுகப்படுகிறது.

**கணக்கிடுவதன் நிலைகள் :**

- மொத்த நிறுவனங்களும் வெவ்வேறு தொழில் குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றன.
- காரணிகளின் வருவாய் மூன்று வகையான இனங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது உழைப்பாளர் வருமானம், மூலதன வருமானம் மற்றும் கலப்பு வருமானம்.
- $Y = w + r + i + \pi + (R - P)$

(iii) **செலவு முறை :**

- இம்முறையில் ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.
- தனிநபர் சுய நுகர்வுச் செலவுகள், நிகர உள்நாட்டு முதலீடு, அரசின் கொள்முதல் செலவு, முதலீட்டு பொருள் வாங்கும் செலவு மற்றும் நிகர ஏற்றுமதி போன்ற அனைத்து செலவுகளையும் கூட்டி செலவு முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.
- $GNP = C + I + G + (X - M)$

**(அல்லது)**

(ஆ) பணவியல் கொள்கை பொருளாதாரத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தும் சக்திவாய்ந்த ஒரு கருவியாகும்.

**பணத்தின் நடுநிலைத் தன்மை :**

(i) பொருளியலாளர்களான விக்ஸ்டெட், ஹேயக் மற்றும் ராபர்ட்சன் ஆகியோர் பணத்தின் நடுநிலைப் பற்றி விவரித்த முக்கிய நிபுணர்கள் ஆவர்கள்.

(ii) பணத்தில் ஏற்படும் மாற்றமே அனைத்து பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கும் அடிப்படை காரணம் ஆகும்.

(iii) பண நடுநிலையாளர்களின் கூற்றுப்படி, பணவியல் மாற்றங்கள் சரியான பொருளாதார அமைப்பில் விலகலையும் இடையூறுகளையும் ஏற்படுத்தும் என்றனர்.

**விகித நிலைத் தன்மை :**

(i) பரிவர்த்தனை விகித நிலைத்தன்மை என்பது பணவியல் கொள்கையின் பாரம்பரிய நோக்கமாகும்.

(ii) எப்பொழுது ஒரு நாட்டின் செலுத்து சமநிலையில் சமனற்ற நிலை தோன்றுகிறதோ அப்பொழுது பணமும் கடனும் விரிவடைகிறது.

(iii) எப்பொழுது தங்கம் உள்வருகிறதோ அப்பொழுது பணமும் கடனும் சுருங்குகிறது.

(iv) செலுத்துச் சமநிலையில் ஏற்படும் சமனற்ற நிலைகள் தானாகவே சரி செய்யப்பட்டு பரிவர்த்தனை விகிதத்தில் நிலைத்தன்மை பேணப்படும்.

(v) பரிவர்த்தனை விகிதத்தில் நிலையற்ற தன்மை இருந்தால், அது தங்கம் வெளிச்செலுத்தல் அல்லது உள்வருதல் ஆகியவற்றால் செலுத்துச் சமநிலையில் சமனற்ற நிலையை உருவாக்கும். ஆகவே பரிவர்த்தனை விகிதங்களில் நிலைத்தன்மையை ஏற்படுத்துவது பன்னாட்டு வாணிபத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**விலை நிலைத்தன்மை :**

பொருளியலாளர்கள் காஸல், கீன்ஸ் போன்றவர்கள் விலை நிலைத்தன்மை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையில் முக்கிய நோக்கமாகும் என்கின்றனர்.

(i) இது வணிக நடவடிக்கையை அதிகரித்து ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தும்.

(ii) விலை நிலைத்தன்மை என்பது விலை மாறாமல் நிலையாக இருப்பதோ, விலைத் தேக்கமடைந்து இருப்பதோ அல்ல.

**முழுவேலை வாய்ப்பு :**

(i) உலக பெருமந்தத்தின் பொழுது வேலைவாய்ப்பின்மை மிக வேகமாக அதிகரித்தது.

(ii) முழுவேலைவாய்ப்பு என்பது பணவியல் கொள்கையின் முக்கிய குறிக்கோளாக இருந்தது.

(iii) 1936-ல் வெளியிடப்பட்ட "வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணத்திற்கான பொதுக் கோட்பாடு" என்ற கீன்ஸின் நூல் முழுவேலைவாய்ப்பு என்ற பணவியல் கோட்பாட்டின் குறிக்கோளை முன்னிலைப் படுத்தியது.

orders@surabooks.com PH: 9600175757 /8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



**பொருளாதார வளர்ச்சி :**

(i) பொருளாதார வளர்ச்சி என்பது நீண்டகாலத்தில் உண்மை தலா வருவாய் அதிகரித்து செல்லும் நடவடிக்கை ஆகும்.

(ii) சமநிலை பண அளவு, உற்பத்தி அளவுகள், சாதகமான சேமிப்பு - முதலீடு ஆகிய சூழ்நிலைகளை பராமரித்து அதன் மூலம் நீடித்த பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையின் குறிக்கோளாக அமைகிறது.

**செலுத்து சமநிலையில் சமநிலையை பேணுதல் :**

(i) இது பணவியல் கொள்கையின் மற்றொரு நோக்கமாகும்.

(ii) உலகவர்த்தகம் சமனற்ற நிலையில் அதிகரித்தால் அந்நிய செலாவணி பிரச்சனை தோன்றும்.

(iii) செலுத்து சமநிலையில் வரும் பற்றாக்குறை பொருளாதாரத்தின் மற்ற குறிக்கோள்களையும் பாதிக்கும்.

(iv) இதனால், குறைவளர்ச்சி நாடுகள் தங்கள் இறக்குமதியைக் குறைப்பதால், அதன் வளர்ச்சி பாதிக்கப்பட்டு, பாதகநிலை ஏற்படும். எனவே பணவியல் கொள்கை செலுத்துச் சமநிலையில் சமமான நிலையினை பேணுவதை குறிக்கோளாக கொண்டுள்ளது.

**45.** (அ) **ADF மற்றும் ASF ன் சமநிலை :**

கீன்ஸின் வேலை வாய்ப்புக் கோட்பாட்டில், ADF மற்றும் ASF சமநிலையை விளக்க குடும்பங்கள் மற்றும் வியாபாரம் ஆகிய இரு துறைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.


(i) நுகர்வு செலவு தொடர்பான முடிவுகளை குடும்பங்களும் முதலீடு தொடர்பான முடிவுகளை வியாபார நிறுவனங்களும் எடுக்கின்றன.

(ii) நுகர்வுச் சார்பு நேர்கோடாகவும், முதலீடு தன்னிச்சையானது எனவும் கீன்ஸ் கோட்பாடு அனுமானிக்கிறது.

கீன்ஸின் கோட்பாட்டில் வருமான சமநிலையை நிர்ணயிக்க இரு அணுகு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

1. தொகு தேவை மற்றும் தொகு அளிப்பு அணுகுமுறை.
2. சேமிப்பு மற்றும் முதலீடு அணுகுமுறை.

(iii) மொத்த தேவை மற்றும் மொத்த அளிப்பு அணுகுமுறை இவ்வரைபடத்தில் விளக்கப்பட்டுள்ளது.




(iv) தொகு தேவை மற்றும் தொகு அளிப்பு 'E' என்ற புள்ளியில் சமநிலையடைகிறது.

(v) இப்புள்ளியில் வேலைவாய்ப்பு $N_0$ ஆக இருக்கும். $ON_1$ அளவு வேலைவாய்ப்பில், தொகு அளிப்பு $N_1R_1$ ஆக இருக்கும் ஆனால் $M_1N_1$ அளவு உற்பத்தி செய்ய உற்பத்தியாளர்களால் முடியும்.

(vi) எதிர்பார்க்கும் இலாபத்தை அடைய வேண்டிய உற்பத்தியின் அளவு $M_1R_1$ ஆகும்.

(vii) இலாப நிலையில் முதலாளி அதிக உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவர்.

(viii) சமநிலை 'E' என்ற புள்ளியை அடைந்த பிறகு உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவதை நிறுத்துவர். ஏனெனில் $N_0$ நிலைக்கு பிறகு வேலைவாய்ப்பு அதிகரித்தால் தொகு தேவை தொகு அளிப்பை விட குறைவாக இருக்கும்.

(ix) ஆகவே வேலை சமநிலையை விளக்குவதில் விளைவுத்தேவை கருத்து முக்கிய பங்கு வகுக்கிறது.

**(அல்லது)**

orders@surabooks.com PH: 9600175757 /8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

(ஆ)

| வ. எண் | உள்நாட்டு வாணிகம் | பன்னாட்டு வாணிகம் |
|---|---|---|
| 1. | ஒரு நாட்டிற்குள் மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இடையே நடைபெறும் வாணிகம் | பல நாட்டின் மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இடையேயான வாணிகம் |
| 2. | உழைப்பு மற்றும் மூலதனம் ஒரு நாட்டின் பகுதிகளுக்கிடையே தடையில்லாமல் இடம் பெயர்தல் | உழைப்பு மற்றும் மூலதனம் நாடுகளுக்கிடையே இடம் பெயர்தல் தடைகளுக்குட்பட்டது. |
| 3. | பொருட்கள் மற்றும் பணிகள் இடம் பெயர்தலில் தடை ஏதுமில்லை. | பொருட்கள் மற்றும் பணிகள் இடம் பெயர்தலை சுங்க வரி மற்றும் பங்களவு போன்ற தடைகள் கடினமாக்குகின்றது. |
| 4. | விற்றல் வாங்கலில் ஒரே ஒரு பணம் மட்டுமே, பயன் படுத்தப்படுகிறது. | பல நாட்டு பணங்கள் பயன் படுத்தப்படுகிறது. |
| 5. | புவி அமைப்பு மற்றும் கால நிலை சூழல் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருக்கும். | புவி அமைப்பு மற்றும் கால நிலை வேறுபடும் இயல்பு கொண்டவை. |
| 6. | வாணிக மற்றும் நிதி நடைமுறைகள் ஒரே மாதிரியானவை. | வாணிகம் மற்றும் நிதி நடைமுறைகள் வேறுபடும் போக்கு கொண்டவை. |
| 7. | அரசமைப்பு முறை மக்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் அரசின் கொள்கைகளில் வேறுபாடில்லை. | அரசமைப்பு முறை மக்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் அரசின் கொள்கைகளில் வேறுபாடுகளிருக்கும். |

**46.** (அ)(i) நுகர்வு சார்பை தூண்டுகின்ற காரணிகளை ஜே.எம். கீன்ஸ் இரண்டாக பிரிக்கின்றார். அதாவது அகவய காரணிகள் மற்றும் புறவய காரணிகள்.

**(ii)** கீன்ஸ் எட்டு நோக்கங்களை பட்டியலிட்டுள்ளார். இவை தனி நபர்களை செலவு செய்வதிலிருந்து விலக்களிக்கிறது.

**அகவயக் காரணிகள் :**

1. **முன்னெச்சரிக்கை நோக்கம் :** எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்விற்காக, கையில் ரொக்கமாக வைப்பது. (எ.கா) விபத்து, உடல் நலனின்மை.
2. **எதிர்பார்க்கும் நோக்கம் :** எதிர்கால தேவைக்கான விருப்பம் (எ.கா) வயதான காலம்.
3. **கணிக்கும் நோக்கம் :** விருப்பம் மற்றும் பாராட்டை அனுபவிப்பதற்கான விருப்பம்.
4. **முன்னேறும் நோக்கம் :** வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற விரும்புதல் சார்ந்த விருப்பம்.
5. **வாணிப நோக்கம் :** வியாபாரத்தை முன்னேற்றுவதற்கான நோக்கம்.

**புறவயக் காரணிகள் :**

புறவயக் காரணிகள் உண்மையான மற்றும் அளவிடக்கூடியது. நீண்ட காலங்களில் இந்த காரணிகளை எளிதாக மாற்றமடையும்.

1. **வருமான பகிர்வு :** சமநிலை வருமான பகிர்வுடைய சமூகத்தில் அதிகமான நுகர்வு விருப்பம் இருக்கும்.
2. **விலை அளவு :** விலை வீழ்ச்சியடையும் போது, உண்மை வருமானம் அதிகரிக்கும், மக்கள் அதிகமாக நுகர்வார்கள் மற்றும் சமூகத்தில் நுகர்வு விருப்பம் அதிகரிக்கும்.
3. **கூலி அளவு :** கூலி அதிகரிக்கும்போது நுகர்வுச் செலவும் அதிகரிக்கும்.
4. **வட்டி வீதம் :** அதிக வட்டி விகிதம் மக்களை அதிக அளவில் பணத்தை சேமிக்க ஊக்கமளிக்கும் மற்றும் நுகர்வைக் குறைக்கும்.
5. **நுகர்வோர் கடன் :** மக்கள் தொகை காரணிகள்

**(அல்லது)**

(ஆ) (1) **உலக வங்கியின் பணிகள் :**

(i) உறுப்பு நாடுகளின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு கடன் வழங்கும் பணியை உலக வங்கி செய்கிறது.

(ii) நீண்ட கால கடன்களை வழங்குகிறது.

**(2) உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் முதலீட்டுக்கான கடன் உதவி :**

உற்பத்திக்கு கடன் முதலீடு வழங்கும் திட்டத்தின் மூலம் உறுப்பு நாடுகளின் நில எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கு உதவி செய்யும் பணியை உலக வங்கி செய்கின்றது.

**(3) பன்னாட்டு வாணிகத்தின் சரிவிகித வளர்ச்சி :**

(i) பன்னாட்டு கடன் மூலதனம் வழங்கி உறுப்பு நாடுகள் அனைத்தும் சரிவிகித பன்னாட்டு வாணிப நீண்டகால வளர்ச்சியடைய உதவுகின்றது.

(ii) இதன் விளைவாக உறுப்பு நாடுகளின் அயல்நாட்டு செலுத்துநிலை சமநிலையை அடையும்.

**(4) கடன் மற்றும் ஈட்டுறுதி வழங்குதல் :**

முக்கிய திட்டங்களுக்கு கடன் வழங்குவது மற்றும் பிற வழிகளில் கடன் பெற ஈட்டுறுதி வழங்குவது ஆகிய பணிகளையும் வங்கி செய்கிறது.

**(5) வெளிநாட்டுத் தனியார் முதலீட்டிற்கு ஊக்கமளித்தல் :**

(i) தனியார் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மூலம் உலக வங்கியின் உறுப்பு நாடுகளுக்கு கடன் வழங்க ஈட்டுறுதிகள் வழங்கும் பணியைச் செய்து வெளிநாட்டு மூலதனத்துக்கு ஊக்கமளிக்கிறது.

**(ii)** இந்த பணியின் மூலம் தனியார் மூலதனத்துடன் ஒன்று சேர்ந்து சொந்த நிதியிலிருந்து மட்டும் கடன் வழங்காமல் கடன் நிதியிலிருந்தும் கடன் வழங்க முடிகிறது.


**(6) தொழில்நுட்ப சேவைகள் :**

உலக வங்கி வாஷிங்டனில் அமைந்துள்ள பணியாளர் கல்லூரி நிபுணர்களைக் கொண்டு தொழில்நுட்ப ஆலோசனைகளையும் உறுப்பு நாடுகளுக்கு வழங்குகிறது.

**47.** (அ) **இலக்கணம் :**

உயர்கின்ற விலைகளையும், குறைந்த வேலையற்றோர் சதவிகிதத்தையும் கொண்ட நல்ல வாணிபக் காலங்களையும், குறைகின்ற விலைகளையும், மிகுகின்ற வேலையில்லாத் திண்டாட்ட சதவிகிதத்தையும் கொண்ட கெட்ட வாணிபக் காலங்களையும் உள்ளடக்கியது வாணிபச் சூழல் ஆகும்.

**வணிகச் சுழற்ச்சியின் கட்டங்கள்**




**(i) பூரிப்பு கட்டம் (Boom) :**

1. நீண்டகால இயல்பான வளர்ச்சி நிலைக்கு மேல் பொருளாதார நடவடிக்கைகள் உயர்ந்து முழு வேலைவாய்ப்பு நிலையை தாண்டுவது வணிகச் சூழலின் வளர்ச்சிக் கட்டம் எனப்படுகிறது.
2. பூரிப்பு நிலையில் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் உச்ச நிலையில் இருக்கும்.

**(ii) பின்னிறக்கம் (Recession) :**

1. வளர்ச்சியின் உச்சத்தில் பூரிப்பை எய்திய பொருளியல் நடவடிக்கைகள் அடுத்ததாக கீழ்நோக்கி திரும்புகின்றன. பூரிப்பில் வெடிப்பு நிலை ஏற்பட்டு நடவடிக்கைகள் பின்னோக்கி திரும்புவதை பின்னிறக்கம் என்கிறோம்.
2. நம்பிக்கைகள் இருந்த இடத்தில் அவநம்பிக்கைகள் தோன்ற ஆரம்பிக்கும். இதன் காரணமாக முதலீட்டை பெருமளவுக்கு குறைக்க ஆரம்பிப்பார்கள்.
3. பங்கு சந்தையில் விலை வீழ்ச்சியின் காரணமாக பெரும் அச்சம் உருவாகும்.

**(iii) மந்தம் (Depression) :**

1. மந்த காலத்தில் பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்குகீழ் மிகத் தீவிரமாக குறைந்து வரும் நிறுவனங்கள் நட்டமடைவதும் மூடப்படுவதும் பொது இயல்புகளாக இருப்பதுடன் வேலை வாய்ப்பின்மையையும் ஏற்படுத்தும்.
2. வணிகச் சுழற்ச்சியின் மிகமோசமான கட்டம் மந்தம் ஆகும்.

**(iv) மீட்சி (Recovery or Revival) :**

1. மந்த நிலைக்குப் பின் மீட்சி இடம் பெறுகிறது. இது மந்தத்திலிருந்து பொருளாதார நடவடிக்கைகள் மேல்நோக்கி திரும்பும் நிகழ்வாகும்.
2. பொருளாதார நடவடிக்கைகளை மேல்நோக்கி திரும்ப ஊக்கமளிக்கின்றன.
3. இதனால் தனியார் முதலீடுகள் மெதுவாக அதிகரித்து பொருளாதார

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



நடவடிக்கைகளான வேலைவாய்ப்பு, உற்பத்தி, வருவாய், கூலி, இலாபம் ஆகியன மீட்சி பெறுகின்றன.

**(அல்லது)**

**(ஆ)** ஒவ்வொரு நாட்டின் மைய வங்கி அந்த நாட்டின் தலைமை வங்கியாகும். இந்தியாவின் மைய வங்கி இந்திய ரிசர்வ் வங்கி என அழைக்கப்படுகிறது. 1935 முதல் ரிசர்வ் வங்கி தனது பணியினை துவங்கியது.

**ரிசர்வ் வங்கியின் பணிகளாவன :**

**(1)** **பண அதிகார அமைப்பு :** இது இந்தியாவில் பண அளிப்பினை கட்டுப்படுத்துவதன் மூலம் அந்நிய செலாவணி பரிவர்த்தனை விகிதத்தினை நிலைப்படுத்தல், சாதகமான செலுத்துநிலையைப் பேணுதல், நிதி நிலைத்தன்மையை ஏற்படுத்தல், பண வீக்கத்தை கட்டுப்படுத்துதல் மற்றும் வங்கி அமைப்பை உறுதியாக்குதல் ஆகியவற்றைச் செய்கிறது.

**(2)** **காகிதப் பண வெளியீடு :** காகிதப் பணத்தை வெளியிடுவதில் முற்றுரிமை பெற்ற நிறுவனம் ரிசர்வ் வங்கியாகும்.

**(3)** **வங்கி உரிமங்கள் வழங்குபவர் :** வங்கிகள் முறைப்படுத்துதல் சட்டம், பிரிவு 22ன் படி ஒவ்வொரு வணிகவங்கியும் இந்தியாவில் வங்கித் தொழில் செய்ய மைய வங்கியிடம் உரிமம் பெற வேண்டியது அவசியம் ஆகும், இப்பணியினை ரிசர்வ் வங்கி செய்துவருகிறது.

**(4)** **அரசுக்கான வங்கி :** இது மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கான வங்கி ஆகும். இது அரசுகளுக்கு குறுகியகால கடன்கள் மற்றும் கடன்கள், கடன் தொடர்பான சேவைகள், அரசின் கடன் பத்திரங்களை உருவாக்கி விற்பனை செய்வது மேலும் வங்கி மற்றும் நிதி தொடர்பான ஆலோசனைகளை வழங்குவது போன்ற பணிகளைச் செய்கிறது.

**(5)** **வங்கிகளின் வங்கி :**

- இது அனைத்து வங்கிகளுக்கும் தலைமை வங்கியாகும்.
- வங்கிகளின் வைப்புகளை ஏற்று, மாற்று சீட்டுகளை மறு தள்ளுபடி செய்வதால் இது வங்கிகளின் வங்கி எனப்படுகிறது.

**(6)** **கடைசிநிலைக்கடன் ஈவோன் :** வணிக வங்கிகளுக்கு தீர்க்க இயலாத நிதிச் சிக்கல்கள் ஏற்படும் பொழுது, நிதிக்கான மற்ற ஆதாரங்கள் இல்லாத சூழ்நிலையின் அச்சிக்களிலிருந்து மீள்வதற்கு இந்திய ரிசர்வ் வங்கி ஈட்டுக்கடனை அளித்து உதவுகிறது.

**(7)** **தீர்வாக செயல்படுகிறது :**

**(i)** வங்கிகளுக்கிடைய நடக்கும் பரிவர்த்தனைகளை தனது 14 தீர்வகங்களைக் கொண்டு சமன் செய்கிறது.

(ii) பரிவர்த்தனைக் கருவிகளை பரிமாறிக் கொள்ள உதவுவதுடன், பரிவர்த்தனை தொடர்பான அறிவுறுத்தல்களையும் செய்து வருகிறது.

**(8)** **அந்நிய செலாவணி பாதுகாவலன் :**

(i) 1999ஆம் ஆண்டு அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்டத்தின்படி, இது அந்நிய செலாவணி மேலாண்மையும் நிர்வகிப்பினையும் மேற்கொள்கிறது.

(ii) அந்நிய பணத்திற்கு எதிரான இந்திய ரூபாயின் பரிமாற்ற விகிதத்தை நிலைப்படுத்துவதற்காக வெளிநாட்டு பணங்களை அவ்வப்போது வாங்கி விற்கும் நடவடிக்கையில் ஈடுபடுகிறது.

❁❁❁❁❁

orders@surabooks.com PH: 9600175757 /8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com